நகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# முரசொலி

பக்கங்கள் ஆறு
விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 123 பிரசோற்பத்தி பங்குனி 16 (29.03.1992) ஞாயிறு

## அரசுக்கு ஆதரவாக பாதயாத்திரை

எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரையைத் தொடர்ந்து அரசுக்கு ஆதரவாகவும் பாதயாத்திரை நடத்தப்படவுள்ளது. அரசுக்கு சார்பான நான்கு அமைப்புக்கள் இதனை அவசர அவசரமாக ஏற்பாடு செய்துள்ளன. இதற்காக மக்களின் ஆதரவு தேடும் வேலைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பூநகரியில் 9 காவலரண்கள் புலிகள் வசம் வீழ்ச்சி

### ஒரு அதிகாரி உட்பட 4 இராணுவத்தினர், 2 கடற்படையினர் பலி;

**பூநகரி கறுக்காய்த்தீவில் அமைக்கப்பட்ட படையினரின் ஒன்பது காவலரண்கள் நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. இதில் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. ஏழு படையினர் கொல்லப்பட்டனர்.**

நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் அரை மணி நேரம் புலிகள் இத்திடீர்த்தாக்குதலை நடத்தியபோதே இக்காவலரண்கள் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவத்தில் ஒரு அதிகாரி நான்கு இராணுவத்தினர், இரு கடற்படையினர் பலியானதாக கூட்டுப்படை தலைமையகம் நேற்று அறிவித்தது.

## தடைசெய்யகோரிக்கை

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யுமாறு நேற்று மதுரையில் கூடிய இந்திய தேசிய மாணவர் காங்கிரஸ் மத்திய அரசைக்கேட்டுள்ளது.

## சகல தமிழ் அகதிகளும் திருப்பி அனுப்படுவார்கள்

இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் பத்தாயிரம் பேர் நாடு திரும்பியுள்ளதாக உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் செய்தியாளரிடம் நேற்றுக் கூறினார்.

அகதிகள் அனைவரையும் திருப்பி அனுப்பி வைப்பதில் இந்திய அரசு தீவிரமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள ஏனைய அகதிகளை கப்பல் மூலமோ விமான மூலமோ திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

## அகதிகளை விமான மூலம் அனுப்ப நடவடிக்கை

தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை விமான மூலம் அனுப்புவது குறித்து மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

இவர்களைக் கப்பலில் அனுப்ப போதிய கப்பல்கள் இல்லை என்றும், காலதாமதம் ஏற்படுவதாலும் விமான மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## வீரச்சாவு

பூநகரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அதிரடித்தாக்குதலின்போது வீரச்சாவை எய்திய போராளிகள் வருமாறு

மேஜர் கவேகன் (சூசைப்பிள்ளை இன்பகுமார் (வல்வெட்டித்துறை) [illegible]), கப்டன் நிதிபரன் அக்பேப் (சின்னராசா ஜீவகன்) பன்குடா மட்டக்களப்பு

## ஹெலி நோட்டம்

நேற்று அதிகாலை 5மணியளவில் திருவடிநிலை, மாதகல் கடற்கரையோரப்பகுதிகளில் ஹெலிகொப்டர் பலதடவைகள் சுற்றி நோட்டம் விட்டு சென்றுள்ளது.

இதேவேளை இக்கடற்பகுதியில் பீரங்கிப் படகுகளின் நடமாட்டமும் காணப்பட்டன, 50

## ஜெயலலிதாவுக்கு மேலும் அதிக பாதுகாப்பு - சவான்

தமிழக முதலமைச்சரைக் கொலைசெய்ய தற்கொலைப் படை ஒன்று வந்திருப்பதாக தகவல்கள் வந்துள்ளதாக உள்துறை அமைச்சர் சவான் தெரிவித்தார்.

தமிழக முதலவருக்கு மேலும் அதிக பாதுகாப்பு வழங்க மத்திய அரசு விரும்புவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை முறியடிக்க தமிழ்நாடு பொலிஸாருக்கு மத்திய அரசு 10 கோடி ரூபாவை வழங்க அனுமதித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## எதிர்க்கட்சியினருக்கு பாதயாத்திரை தண்டனை

சதிர்காமத்தில் இருக்கும் தெய்வத்தின் சாபத்தினாலேயே எதிர்க்கட்சியினர் நடந்து வருவதாக பாதயாத்திரை குறித்து சிலுமின பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியில் உள்ள மத நம்பிக்கையற்ற மார்க்ஸிஸவாதிகள் செய்த பாவத்துக்கு தண்டனையாகவே இப்பாதயாத்திரை அமைவதாக இளாநிமதி குறிப்பிடுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ● நாடு திரும்பிய அகதியிடம் படையினர் பலவந்தமாக இரத்தம் எடுத்தனர்

இந்தியாவில் இருந்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகள் உப்புவெளி இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு பலவந்தமாக இரத்தம் எடுக்கப்படுவதாக தெரியவருகிறது

இம்மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை இந்தியாவில் இருந்து திருகோணமலைக்கு கப்பலில் வந்த அகதிகளை ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் மாற்றுத் தமிழ்க் குழுக்களும் இணைந்து உப்பு வெளியில் உள்ள சியாமளா வைத்திய சாலைக்குக் கொண்டு சென்று பலவந்தமாக இரத்தம் எடுக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த சிங்களராணுவச் சிப்பாய்களுக்காக பலவந்தமாக இரத்தம் எடுத்ததாக வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையடியைச் சேர்ந்த ஐந்துபிள்ளைகளின் தாயாராகிய சசிலாதேவி ரவீந்திரதாஸ் (32) தெரிவித்தார். 69

## கனடா பத்திரிகை

தமிழீழ காவல்துறையின் பிறவபு தமிழ் அரசின் படிக்கல் என்று கனடாவில் இருந்து வெளியாகும் 'உலகத் தமிழர்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தந்தை செல்வா நினைவு ஆராதனை

தந்தை செல்வா பிறந்த தினமான மார்ச் 31 ஆம் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு ஒரு நினைவு ஆராதனை சுண்டுக்குளி பரியோவான் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வாராதனையை யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கியம் ஒழுங்கு செய்துள்ளது.

## இன்று முடிவு தெரியும்

## செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளைத் தேர்தல்

யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

நேற்று நள்ளிரவு வரை தேர்தல் பிரசார வேலைகள் குடாநாட்டின் பல இடங்களிலும் நடைபெற்றன.

புதியநிர்வாகிகள் தெரிவு இன்றுமாலை தெரியும்பழையவர்களா புதிய முகங்களா என்பதை இன்று வரை பொறுத்திருந்துபார்ப்போம், 47

## இந்திய எம். பிக்கள் அயோத்திக்கு விஜயம்

அயோத்தி நகருக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் செல்ல விரும்புவதாக பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார்.

உத்திரபிரதேச முதலமைச்சர் இதற்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அவர் சொன்னார்,

உள்துறை அமைச்சர் சவான் அயோத்திக்கு செல்ல வேண்டும் என வாஜ்பாய் தெரிவித்துள்ளார்,

## பூநகரியில் பகல் நேரம் சண்டை நடந்ததாம்

பூநகரியில் நேற்றும் பகலில் 2 மணிக்கு இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டதாகக் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்தது

நாற்பத்தைந்து நிமிட நேரம் நடைபெற்ற இச்சண்டையின் போது படையினரின் காப்பரண்கள் மீது போராளிகள் தாக்குதல் நடத்தியதாகவும் தலைமையகம் தெரிவித்தது

## 1989 பொதுத் தேர்தல் ஒரு மோசடித் தேர்தல்

1989 இல் நடைபெற்ற பொதுத் தேர்தல் ஒரு மோசடித் தேர்தல் என்று எதிர்க்கட்சி தெரிவித்துள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன

பாராளுமன்றத்தைக் கலைத்து அமைதியான பொதுத் தேர்தலை நடத்துமாறும் இக்கட்சிகள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன

அனுரா பண்டாரநாயக்கா இத் தீர்மானத்தை முதலில் எடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

## ★ ஐ.நா.பாதுகாப்புச்சபை தீர்மானம்

## லிபியாவுக்கு எதிராக விமானப் போக்குவரத்துதடை

லிபியாவுக்கு எதிராக விமானப் போக்குவரத்து தடையையும், இராணுவ உதவித்தடையையும் கொண்டுவர ஐ. நா பாதுகாப்புச் சபை தீர்மானித்துள்ளது.

விமானக் குண்டுவெடிப்புச் சந்தேக நபர்களான இரு லிபிய பிரஜைகளை ஒப்படைக்க லிபியா மறுத்து வருவதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது,

அடுத்த மாதம் 15ஆம் திகதி நடைபெறும் ஐ. நா பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் இந்தத்தடை கொண்டுவரப்படவுள்ளது,

அத்துடன் வெளிநாடுகளில் உள்ள சில லிபிய ராஜதந்திரிகளும் வெளியேற்றப்படுவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இவ்வார இராசிப் பலன்

29 . 03 . 92 --- 04 . 04 . 92

மேடம்; உங்களுக்குத் தொழில் புரியும் இடத்திலும், தொழில் நாடிச் செல்லும் புதியஇடங்களிலும் சோதனைகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சிலர் கடன்படுவீர்கள், புதிய நண்பர்கள், பெரியவர்களால் உதவிகள் கிடைக்கும். புத்திரரால் செல்வாக்கு உயரும். பொருள் தவற இடமுண்டு. அவதானமாக இருக்கவும். உங்கள் எதிரிகள் உங்களைக் கண்டு பயப்படுவர்.

இடபம்; இக்காலம் உங்களுக்கு அலைச்சலாக இருக்கும். பொருள்வரவு அதிகரிக்கும் உறவினர்கள் வீண்பழி சுமத்துவார்கள் இருப்பினும் தொழில் இடத்தில் உற்சாகம் இருக்கும். போக்குவரத்தில் விபத்துக்கள் வரலாம். கவனமாக இருந்தால் விலக்கிக் கொள்ளலாம் பொருள் விடயத்தில் அவதானமாக இருக்கவும் பொறுப்பு நின்று நிம்மதியை இழக்காதீர்கள்.

மிதுனம்: எந்த விடயத்தையும் நீங்கள் இரகசியமாகவே செய்யுங்கள். ஏனெனில் உங்களுடன் சேர்ந்திருப்பவர்களே பொறாமையால் உங்களுக்குக் கெடுதிகளைச் செய்வார்கள். குடும்பத்தினரால் கலங்குவீர்கள். காயங்கள், அலைச்சல்கள் வரலாம் குலதெய்வவழிபாடு உங்களைக் காப்பாற்றும்.

கடகம்: குடும்பத்தினரின் அலுவலுக்காக ஓடியாடித்திரிவீர்கள் மாற்றம் நடக்கும். நற்செய்திகள் தூரத்திலிருந்து வரும். பிறருக்கு உதவி செய்வீர்கள். சுபகாரியங்கள் நிறைவேறும். நண்பர்களால் நஷ்டங்கள் உண்டாகும். உடல் நோ, உஷ்ண வியாதிகள் ஏற்படலாம் தந்தை வழியினரின் உதவி கிடைக்கும்.

சிங்கம் உங்களுக்குத் தொழில்தானத்தில் கௌரவப் பிரச்சினை தலைதூக்கும். சிலரால் பழி சுமத்தப்படுவீர்கள் நீங்களும் கோபத்தால் கடுமையாகச் செயற்படுவீர்கள். புதிய நண்பர்கள், பெரியவர்கள் உதவிசெய்வார்கள். பெண்கள், பிள்ளைகளுக்காக நல்ல காரியங்கள் செய்வீர்கள். ஆனால் அவர்களைத் திருப்திப்படுத்த முடியாமல் இருக்கும் வயிறு, கண் சம்பந்தமான சிறு ரோகங்கள்வரும்.

கன்னி; உங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு விஷக்கடி. அல்லது விஷக்காய்ச்சலால் வேதனை உண்டாகலாம். பணநஷ்டம் ஏற்படும். எக்காரியத்திலும் தடை ஏற்பட்டபடி இருக்கும் வாகன விபத்து, கைகால் ஒய்ச்சல் சிலருக்கு வந்தாலும் பெரிய கஷ்டம் வராது. மனைவிவழியினரால் தொல்லை வரும்.

துலாம் நீங்கள் எடுத்தகாரியத்தை நிறைவேற்றுவீர்கள். பொருளைக் கொடுத்தோ, வைத்த இடத்தில் தவற விட்டோ கவலைப்படுவீர்கள். தொழில் புரியும் இடத்திலும் வீட்டிலும் குறை கேட்பீர்கள். பிரயாணத்தால் அலைச்சல் ஏற்படும் சிலரின் துஷ்டகாரியத்தால் வேதனை ஏற்படும். சகோதரருக்கு மாற்றம் ஏற்படும்

விருச்சிகம்: உங்களுக்குத் தொழில் புரியும் இடத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் ஏற்படும் காத்திருந்த பகைவர்களாலும், உங்களை வெல்ல முடியாது. அடிக்கடி பயம் ஏற்படும். இருமிகளால் உடல் அசதி ஏற்படும். காயங்கள், வயிற்றுவலி ஏற்படலாம். நம்பிக்கை மோசம் ஏற்படும். பணவிஷயத்தில் கவனம் தேவையாகும்.

தனு; நீங்கள் உங்கள் காரியங்களை அதிகமாகக் கதைத்துக் கெடுத்துக் கொள்ள இடம் உண்டு. தொழில்தானத்தில் போட்டி, பொறாமை ஏற்படும். ஆனால் கௌரவிக்கப்படுவீர்கள் உறவினரால் வீண்பழி சுமத்தப்படுவீர்கள். குடும்பச் செலவு அதிகரிக்கும். பிரயாணத்தால் பொருள் வரவு ஏற்படும், தூரதேசச் செய்தியால்உற்சாகம்ஏற்படும்

மகரம்; நீங்கள் எவரது புத்திமதிகளையும் கேட்காமல் நடப்பதால் எல்லோரும் வெறுப்பார்கள். தந்தை வழியினருடனும், அயலவர்களுடனும் வாக்குவாதப்படலாம் அடிக்கடி வரும் கோபத்தால் கெட்ட வார்த்தைகளால் பிறரை ஏசுவீர்கள் குடும்பத்தினருக்கு நலமில்லை. விஷத்தால், நெருப்பால், ஆயுதத்தால்காயம் வர இடமுண்டு. ஆயினும் தெய்வபக்தி உங்களைக் காப்பாற்றும்

கும்பம்; நீங்கள் பணவிஷயத்தில் ஏமாற்றம் அடைவீர்கள், குடும்பச் செலவால் கடன்பட இடமுண்டு. சகோதரர்கள் விடயமாக அடிக்கடி அலைச்சல் ஏற்படும் பிள்ளைகளால் அல்லது நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். பெரியவர்களாலும், தொழில் புரியும் இடத்திலுள்ளவர்களாலும் உதவி பெறுவீர்கள். குடும்பத்தவரின் பாதிப்பால் கலக்கம் ஏற்படும்.

மீனம்; உங்களுக்கு நெருங்கிய உறவினர்களாலும், பெண்களாலும் சோதனைகள் ஏற்படும். மறைமுகப் பகைவர்கள் தொல்லைகள் கொடுப்பார்கள், குடும்ப சுபகாரியங்களுக்காக ஓடியாடித்திரிவீர்கள். பிரயாணத்தால் கஷ்டம் ஏற்படும், செலவு அதிகரிக்கும், பணக்கஷ்டத்தால் கவலை ஏற்படும். ஆயினும் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும்.

நல்லூர் சோதிடர்
இ. மகாதேவா

# வெளிவாரிப் பட்டப் படிப்புக்கான கல்வித் தகைமையில் சலுகை

யாழ், பல்கலைக் கழகத்தில் வெளிவாரி பட்டப் படிப்பை மேற்கொள்ளுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கலைத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

பேராதனை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் மட்டுமே இந்த வெளிவாரிப் பட்டப் படிப்பு வசதி இருந்து வந்தது,

கடந்த அக்டோபரில் இருந்து யாழ் பல்கலைக்கழகத்திலும் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மட்டுமன்றி அவற்றுக்குச் சமமான கல்வித் தராதரத்தையுடையவர்களும் இப்பயிற்சி நெறிக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர்களாகக் கணிக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

ஏதாவது ஒரு பட்டத்தைப் பெற்ற ஒருவர் பிறிதொரு பாடநெறியில் விசேட பட்டம் பெற விரும்பின் அதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மதுரையில் வயிற்றோட்டம்

## ஐவர் பலி; 2500பேர் அபாய நிலையில்

தமிழ் நாட்டில் மதுரை மாவட்டத்தில் வயிற்றோட்ட நோய் வேகமாகப் பரவி வருவதாகத் தகவலொன்று தெரிவிக்கிறது

கடந்த சில தினங்களில் மட்டும் மதுரையில் வயிற்றோட்ட நோய்க்கு ஐவர் பலியானார்கள். 200 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேகமாகப் பரவிவரும் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக மதுரை மாவட்டத்தில் இதுவரை 1-, 500 பேருக்கு வயிற்றோட்டத் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

# வெள்ளவத்தைப் பகுதிக்கான குடிநீர் விநியோகம் பாதிப்பு

வெள்ளவத்தைப் பகுதிக்கான குடிநீர் விநியோகம் கடந்த புதன்கிழமை முதல் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலி வீதிக்கு இடதுபக்கமாக வசிப்போரே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்,

இதனால் அப்பகுதியில் வசிப்போர் தண்ணீர் தேடி இரவிரவாக அலைவதை அவதானிக்க முடிவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பெண் இராணுவத்தினரின் கெடுபிடிகளும் அதிகரிப்பு

தாண்டிக்குளம் இராணுவத் தடைமுகாமில் பயணிகளைச் சோதனை செய்யும் பெண் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்,

இவர்கள் பிரயாணப் பைகளில் உள்ள பொதிகளைக் கையால் இழுத்தும், பெட்டி போன்றவற்றை உடைத்துச் சேதப்படுத்தியும் வருவதால் பொருள்களில் கூடுதலானவை வீண் விரயமாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மீளக் குடியேற விடாது

## அம்பாறை அகதிகளுக்கு அச்சுறுத்தல்!

தமிழகத்திலிருந்து இலங்கை திரும்பிய அகதிகளில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தோர் தங்கள் பழைய இடங்களில் மீளக்குடியமர அச்சம் தெரிவிக்கின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது,

இம்மாவட்டத்தில் வீரமுனை, சொறிக்கல்முனை போன்ற கிராமங்களில் தமிழ் அகதிகள் மீண்டும் குடியமர பிறிதொரு சமூகத்தினர் தடையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஊவாவில் கைதானோர் படிப்படியாக விடுதலையாவர்

ஊவாப் பகுதியில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்படுவர் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இவர்களின் நிலை தொடர்பாக அவர் அண்மையில் ஜனாதிபதியையும், பிரதமரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்,

கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுள்ள இவர்கள் தற்பொழுது விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் விசாரணை முடிந்தவர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தொண்டா தெரிவித்தார்.

# நாகலாந்து மாநிலத்தில் மக்கள் முன்னணி அரசு கலைப்பு!

நாகலாந்து மாநில ஆட்சி கலைக்கப்பட்டுள்ளது.

நாகலாந்தில் மக்கள் முன்னணிக் கட்சி ஆட்சியே இருந்துவந்தது. அங்கு இந்திரா காங்கிரஸ் எதிர்கட்சியாக இருந்தது.

60 உறுப்பினர்களைக் கொண்ட நாகலாந்து சட்டசபை கலைக்கப்பட்ட போது 45 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர் இவர்களில் 19 பேர் காங்கிரஸ் கட்சியையும் இருவர் சுயேச்சை அணியையும் சேர்ந்தவர்கள்.

சட்டசபையில் இருந்த 15 மக்கள் முன்னணி உறுப்பினர்கள் கட்சித் தாவல் சட்டத்தின் கீழ் பதவி நீக்கப்பட்டதையடுத்தே இந்த நிலை அங்கு ஏற்பட்டதாக இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது ஆனால் குறித்த 15 உறுப்பினர்களையும் கட்சி மாறுமாறு காங்கிரஸே தூண்டியது என நாகலாந்து மக்கள் முன்னணி அரசின் முதல்வர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# மன்னார் அகதி முகாம்களில் குடிநீருக்குத் தட்டுப்பாடு

மன்னாரில் நிலவும் கடும் வறட்சியினால் தற்பொழுது இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ள மன்னார்ப் பகுதி அகதிகள் பெருஞ் சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கடும் வறட்சியினால் மடு அகதிமுகாம் உட்பட மன்னார்ப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களில் குடிநீருக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது

இதனால் அகதிகள், அகதி முகாம்களில் தங்குவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் அறிவுறுத்தியுள்ளது,

# ஆங்கிலப் போதனையை அலட்சியம் செய்தது பெரும் தவறு

இலங்கையில் கடந்த ஒரு சில தசாப்தங்களாக ஆங்கில போதனை அலட்சியம் செய்யப்பட்டுவிட்டது. இது பெரும் தவறு என உயர் கல்வி அமைச்சர் ஹமீத் கூறியுள்ளார்.

இந்த கூட்டு மொத்தத் தவறுக்கான விலையை எமது இளைஞர் சமுதாயம் வழங்கியிருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

# ஆர்ஜன்டீனா குண்டு வெடிப்பு; 4 பாக். பிரஜைகள் கைது!

சில தினங்களுக்கு முன்னர் ஆர்ஜன்டீனா தலைநகரில் இஸ்ரேலிய தூதுவராலயம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது தொடர்பாக ஆர்ஜன்டீனாவில் தங்கியிருந்த நான்கு பாகிஸ்தான் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பெயர் விவரம் தெரிவிக்கப்படாத இந்த நால்வரும் நேற்று முன்தினம் ஆர்ஜன்டீனா நீதிமன்றமொன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

குண்டு வைத்தவர்களைப் பிடிக்குமாறு இஸ்ரேல் ஆர்ஜன்டீனாவை நெருக்கி வருகின்றது

இதனால் யாரையாவது பிடித்துக் குற்றஞ்சாட்டுவதே ஒரே வழி என ஆர்ஜன்டீனா கருதுகிறது இந்த நிலையில் குண்டுவைத்தவர்கள் யாரோ இருக்க அகப்பட்டது இந்த பாக், அப்பாவிகள்தான் என இது குறித்துச் செய்தி விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்புச்சம்பவத்தில்10 இஸ்ரேல் அதிகாரிகள் கொல்லப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## கருத்தரங்கு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரிவுக்குட்பட்ட கொத்தணிப் பாடசாலைகள் மட்டத்திலும் கோட்ட மட்டத்திலும் நடைபெறும் மெய்வல்லுநர் போட்டிகளில் மத்தியஸ்தர்களாகக் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு ஒன்று வெகுவிரைவில் நடத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு மத்தியஸ்தர்களுக்கான பயிற்சியினைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆசிரியர்களது பெயர், பாடசாலை முகவரி முதலான தரவுகளைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு பண்டத்தரிப்புக் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்களுக்கும் பணித்துள்ளார்.

(18)

★ ஐ. நா. வாக்கெடுப்பு அடுத்த வாரம் வரை ஒத்திவைப்பு

# விமானத்தடை பிரேரணை; 1971 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மீறும் செயல் என லிபியா கண்டனம்!

லிபியா மீது தடைகள் விதிப்பது குறித்த வாக்கெடுப்பை ஐ. நா. பந்தோபஸ்துச் சபை அடுத்த வாரம் வரை ஒத்திவைத்துள்ளது ஐ. நா. அதிகாரியொருவர் நியூயோர்க்கில் இதனைத் தெரிவித்தார்.

லிபியா மீது விமானப் போக்குவரத்துத் தடையை ஏற்படுத்தவும், அந்நாட்டிற்கு விமானங்களையோ மற்றும் விமான உதிரிப்பாகங்களையோ விற்கவும் தடை விதிக்கும் தீர்மானமொன்றை ஐ. நா பந்தோபஸ்து சபை தயாரித்துள்ளமை தெரிந்ததே.

## உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு

இத்தத் தடைகளை அமுலாக்குவது குறித்து ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் பல நாடுகள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளதாலேயே வாக்கெடுப்பு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

இது குறித்த தமது நாட்டு அரசுகளுடன் தொடர்பு கொண்டு சரியான முடிவொன்றை எடுப்பதற்கு இக்கால அவகாசத்தை ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பயன்படுத்திக் கொள்ளுவர்.

## உடன்படிக்கையை மீறும் செயல்

இதனிடையே லிபியாவுக்கு எதிரான தடையில், விமானப் போக்குவரத்து பாதுகாப்பு குறித்த 1971 ஆம் ஆண்டு உடன்படிக்கையை மீறுவதான ஒன்று என லிபியா குற்றம் சாட்டியுள்ளது.

இதற்குப் பதிலளித்த அமெரிக்கா ஐ. நா. பந்தோபஸ்து சபையின் பணியைத் தடுக்கும் வகையில் சர்வதேச நீதிமன்றத்தை லிபியா பயன்படுத்துகிறது எனக் குற்றம் சாட்டியுள்ளது.

## சட்ட ஆலோசகர் கண்டனம்

இது இவ்வாறிருக்க உலக நீதிமன்ற விசாரணைகளின் போது அமெரிக்க அதிகாரிகள் விடுத்த அறிக்கைகளை ஜோடித்து தனது வழக்கில் வெற்றிபெற லிபியா முயலுகிறது என அமெரிக்க சட்ட ஆலோசகர் கூறியுள்ளார்.

## அமெரிக்கா நெருக்கவில்லை

1988 ஆம் ஆண்டு பான் அமெரிக்க விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்த்ததாகச் சந்தேகிக்கப்படும் லிபிய நாட்டவர் இருவரையும் ஒப்படைக்குமாறு அமெரிக்கா லிபியாவை நெருக்கவில்லை எனவும் அவர் சொன்னார்.

## லிபியாவின் கோரிக்கை

தனக்கு எதிராக இராணுவ நடவடிக்கை உட்பட எந்த நடவடிக்கையையும் அமெரிக்காவும் பிரிட்டனும் எடுக்காது தடுப்பதற்காக உடனடியாகத் தீர்ப்பளிக்குமாறு சர்வதேச நீதிமன்றத்தை லிபியா கேட்டுள்ளது.

## மீண்டும் வற்புறுத்தல்

லிபியாவின் நீதிமன்றங்களிலேயே இந்த இரு சந்தேக நபர்களையும் விசாரிக்கலாமென லிபியா மீண்டும் வற்புறுத்தியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தங்கச்சங்கிலியை அறுத்த இராணுவ கோப்ரல் கைது!

பஸ்ஸில் பயணம் செய்த ஆசிரியை ஒருவரின் தங்கச்சங்கிலியைப் பட்டப்பகலில் பறித்துக் கொண்டு ஓடியதாக இராணுவ கோப்ரல் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் மொரணியகலவில் நிகழ்ந்துள்ளது. கும்புறுகமுவ என்ற இடத்திலுள்ள கோப்ரலின் வீட்டின் மண்ணெண்ணெய்ப் போத்தலிலிருந்து தங்கச்சங்கிலி மீட்கப்பட்டது. அவரும், அவருக்கு உடந்தையாக இருந்த மற்றொருவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## நெல்லியடியில் இன்று விபுலானந்தர் நூல் ஆய்வரங்கு

சாளரம் வெளியீடாக வெளிவந்துள்ள 'யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்' என்ற நூலின் அறிமுகமும், ஆய்வரங்கும் இன்று மாலை மூன்று மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெறுகின்றது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் பொ. வால சிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் எழுத்தாளர் தெணியான், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் வி. கே. நடராசா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலதிபர் யோகரத்தினம்-யோகி ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

வரவேற்புரையை அனந்தராஜும் நன்றியுரையை விவேகும் நிகழ்த்துவர். 11

## இளைஞர் சேவை மன்ற செயற்பாடுகள் விஸ்தரிப்பு!

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடு வடக்கு கிழக்கும் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் பல இளைஞர் அபிவிருத்தி மன்றங்களை வட-கிழக்கு மாகாணசபையுடன் இளைஞர்சேவை மன்றம் இணைந்து நடாத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 'இலங்கை அரசு மீது இந்தியாவின் மறைமுக நெருக்குதல்

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதில் இலங்கை அரசு மீதான இந்தியாவின் மறைமுக நெருக்குதல்கள் அண்மைக் காலத்தில் அதிகரித்து வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது."

இவ்வாறு கொழும்பு நாளிதழ் ஒன்று தனது வாராந்த விமர்சனத்தில் தெரிவித்துள்ளது.

## நாமும் தடை விதிப்போம் என்கிறார் கேணல் கடாபி

தனக்கு எதிராகத் தடை விதிக்கும் நாடுகளின் மீது லிபியா தானே தடைவிதிக்க முடியுமென லிபிய அதிபர் கேணல் கடாபி அறிவித்துள்ளார்.

இவ்வாறான நாடுகளிடமிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதனையும் அந்நாடுகளுக்கு லிபியாவிலிருந்து பொருள்களை ஏற்றுமதி செய்வதனையும் லிபியா தடுக்கும் எனவும் கடாபி எச்சரித்துள்ளார்.

## ஈராக் மீதான தடை தொடருமெனஐ.நா. அறிவிப்பு

ஈராக்கிற்கு எதிரான பொருளாதாரத்தடைதொடருமென ஐ. நா. பந்தோபஸ்துச் சபை நேற்று அறிவித்துள்ளது.

தடையை நீக்குவதற்கான ஒரு சில நிபந்தனைகளை ஈராக் இன்னமும் ஏற்காத காரணத்தினாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆயுத அழிப்பு நடவடிக்கைக்கு ஈராக் இணங்கியதைப் பற்றி அதன் மீதான ஐ. நா. வின் தடை நீக்கப்படலாமென கடந்த சில தினங்களாக எதிர்பார்க்கப்பட்டு வந்தது.

## உங்கள் தலையைக்காக்க இறைச்சியைத்தவிருங்கள்

உணவில் அதிகமாக இறைச்சி சேர்ந்தால் தலையில் வழுக்கை விழும் என்கிறார்கள் சீன விஞ்ஞானிகள்.

இறைச்சியின் கொலஸ்ரோல் கொழுப்புச் சத்து மயிர்த்துவாரங்களை அடைத்து மயிர் உதிர்ந்துவிடக் காரணமாகிறதென அவர்கள் கூறுகிறார்கள்.

## கொழும்பு இந்து மாணவனுக்கு பொறியியற்துறையில் 4ஆவது இடம்

1991ஆம் ஆண்டு ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் முதல் நான்கு இடங்களையும் கொழும்புமாவட்டப் பொறியியல் மாணவர்களே பெற்றுள்ளனர்.

பிற மாவட்ட மாணவர்கள் வர்த்தகம், வைத்தியம், கலைப் பாடங்களில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

றோயல், ஆனந்தாக் கல்லூரி மாணவர்களே பொறியியற்துறையில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளனர்.

பொறியியற்துறையில் நான்காவது அதி உயர் புள்ளியை பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த கணேசன் உமாநேசன் (355 புள்ளிகள்) பெற்றுள்ளார்.

## அமைச்சர் மனைவியின் கோரிக்கை நிராகரிப்பு

வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத்தின் மனைவியும் அவரது பிரத்தியேகச் செயலாளருமான திருமதி ஹேரத் ஸ்ரீலங்கா ஒலிம்பிக் சம்மேளனப் பதவிக்குச் சமர்ப்பித்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அதிகாரியின் தலைவர் அல்லது செயலாளர் பதவிக்குப் போட்டியிடும் ஒருவர் குறிப்பிட்ட விளையாட்டுத் துறையில் முக்கிய சுற்றுப்போட்டியில் பங்குபற்றியவராக இருத்தல் வேண்டும்.

திருமதி ஹேரத் அவ்வாறான தகுதியைப் பெற்றிருக்கவில்லை, என்றும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் கேர்ணல் வி. எல். குடாகமை அவர்கள் அறிவித்துள்ளார்

## தேயிலைச் சபையைக் கலைக்க ஆலோசனை தெரிவிப்பு

ஸ்ரீலங்கா தேயிலை வர்த்தகர்கள் சங்கம் தேயிலைச் சபையைக் கலைத்து விடுமாறு கோரியுள்ளது.

தேயிலைத் தொழில் தற்போது எதிர்நோக்கும் பாரிய இக்கட்டுக்களை அடிப்படையாகக் கொண்டே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சபை உருவாக்கப்பட்டதற்கான நோக்கத்தைப் பூர்த்தி செய்யவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்குப் பதிலாகத் தேயிலைப் பிரசார சபை, போன்று தேயிலை சந்தைப்படுத்தும் சபை ஒன்றை உருவாக்கி அதில் தேயிலை ஏற்றுமதியாளர்களையும், சந்தைப்படுத்தும் உயர் தொழிலாளர்களையும் உள்ளடக்க வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

## மேலும் 15 தினங்களுக்கு யுத்தநிறுத்தம் தொடரும்

மேலும் 15 தினங்களுக்கு சண்டை நிறுத்தத்தைத் தொடர்வதற்கு அசர்பைஜானும் ஆர்மேனியாவும் இணங்கியுள்ளன.

ஏற்கனவே அமுலில் இருந்த ஒரு வாரகால யுத்த நிறுத்தம் கடந்த வெள்ளிக்கிழமை முடிவடைந்ததையடுத்தே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

## யாழ் வரும் குழுவில் 10 பிக்குகள் இடம்பெறுவர்

யாழ்ப்பாணம் வரவுள்ள பௌத்த குருமார் குழுவில் பத்துப் பௌத்த குருமார்கள் இடம்பெறுவர் என கொழும்பு ஏரிக்கரைப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இக் குழுவினர் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சியில் ஈடுபடுவர் எனவும் அப்பத்திரிகை மேலும் எழுதியுள்ளது.

## கொழும்பு சுற்றுப்புறப் பகுதியில் வாந்திபேதி பரவுகிறது!

கொழும்பின் சுற்று புறப் பகுதியில் வாந்திபேதி நோய் பரவி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

களனி, வெல்லம்பிட்டி பகுதிகளில் வாந்திபேதி நோய்க்கு கடந்த சில தினங்களில் இருவர் பலியானதாகச் சுகாதாரப் பகுதி அறிவித்துள்ளது.

## அதிபர்கள் கவனக்குறைவால் பொருள்கள் வழங்கமுடியவில்லை

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை அதிபர்களின் கவனக்குறைபாட்டினால் தான் டிசம்பர், ஜனவரி மாதங்களுக்குரிய மாணவர்களின் மதிய உணவு முத்திரைக்கு பொருள்கள் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக யாழ் ப. நோ. கூ. சங்க வட்டாரம் தெரிவித்தது.

பல பாடசாலை அதிபர்கள் மாணவ முத்திரைகளின் பெறுமதி பட்டியலை சங்கத்துக்கு அனுப்பவில்லை எனவும் ஒரு சிலபாடசாலைகளில் இருந்தே பட்டியல்கள் தமக்கு வந்திருப்பதாக இச்சங்க வட்டாரம் மேலும் தெரிவித்தது.

இதனால் அடுத்த வாரஇறுதியில் இருந்து இம் முத்திரைகளுக்கான பொருள்கள் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சிலநாள்களாகமாணவர்கள் இச்சங்க கிளைகளுக்கு அலைந்து திரிகின்றதையும் காணமுடிகிறது. 47

## எதிர்க்கட்சி பாதயாத்திரைக்கு தெற்கில் மக்கள் ஆதரவு

எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரை தெற்கே சென்றபோது மக்களின் ஆதரவு கிடைத்ததாக சிங்கள பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இப்பாதயாத்திரையின் போது ஒன்றாகச் சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறையில் பாதயாத்திரை சென்றபோது வீதியின் இரு மருங்கிலும் நின்ற மக்கள் ஜயகோஷம் செய்து வரவேற்றனர்.

ருஹுணு பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்க்கட்சி தொழிற்சங்கங்கள் என்பன வரவேற்றன.

மாத்தறையில் மட்டும் பத்தாயிரம் பேர் இப்பாதயாத்திரையில் பங்குபற்றினர்.

திஸ்ஸமஹாராமயவுக்கு சென்றதும் ஒரு லட்சம் பேர் சேர்ந்துகொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பங்களதேஷில் பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது

பங்களாதேஷில் சுன்பாத் என்னும் பத்திரிகை அலுவலகம் மீண்டும் தாக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களில் நடந்த ஐந்தாவது தாக்குதல் இதுவாகும்.

ஆயுதம் ஏந்திய கும்பல் ஒன்று தாக்குதலை நடத்திவிட்டுச் செல்லும்போது குண்டுகளை வெடித்தும் துப்பாக்கியால் சுட்டும் சென்றது. இதில் ஏழுபேர் காயமடைந்தார்கள்.

## இலங்கைக்கு மேல் சூரியன்

### ஏப்ரல் 5 முதல் 15 வரை வெப்பம் அதிகரிப்பு

சூரியன் இலங்கைக்கு மேலாக இருப்பதாலேயே இரவு பகலாக நாட்டில் வெப்பம் நிலவுவதாக வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் மே மாதத்துக்கு முன்னர் மழை பெய்யமாட்டாது எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை தெற்கில் இருந்து வடக்கு நோக்கிச் செல்லும்போது இலங்கைக்கு மேலாகச் செல்லும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் சராசரி வெப்பநிலை 2 முதல் 3 சென்றிகிறேற்றினால் அதிகரித்துள்ளது.

வானத்தின் மேற்பரப்பிலும் முகில் கூட்டங்களும் நீர் செறிந்த குளிர்த் தன்மையும் குறைந்துள்ளன.

இதன் காரணமாக சூரியக் கதிர்கள் பூமியை நேரடியாகவே தாக்குகின்றன.

கடல் காற்றினால் ஓரளவு பகல் நேர வெப்பம் குறைந்துள்ளது.

## படிவங்களில் கையொப்பம்வாங்கி இலங்கைக்கு அனுப்புகின்றனர்

தமிழ் நாட்டில் திருச்சி அகதி முகாமில் சில படிவங்களில் கையொப்பமிடச் செய்து தமிழக அரசு தம்மைக் கப்பல் மூலமாக அனுப்பி வைத்ததாக அங்கிருந்து வந்த வல்வெட்டித்துறை வாசி ஒருவர் கூறினார்.

உப்புவெளியில் உள்ள ஓலைக் குடிசைகள் போன்ற முகாம்களில் ஆறு நாள்கள் வைத்திருந்து விட்டு வவுனியாவிற்கு ரெயில் மூலம் கொண்டு வந்து ரேயில்வே ஸ்ரேசனுக்கு சமீபமாக எட்டு நாள்கள் தங்க வைக்கப்பட்டதாகவும் விரும்பியவர்கள் தமது சொந்த ஊர்களுக்கும் போவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள் என்றும் அவர் சொன்னார்.

நானும் எனது ஐந்து பிள்ளைகளும் தாண்டிக்குளம் வந்து வாகன உதவியின் மூலம் எனது சொந்த ஊரான வல்வெட்டித்துறை வந்து சேர்ந்துள்ளேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 09

## திருமலை மாவட்டத்தில் விசேட புனர்நிர்மாண வேலை

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையின் போது சேதமான கட்டிடங்கள், வீடுகள், வீதிகள் என்பவற்றைத் திருத்த அரசு உடன் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண விசேட புனர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் இவை திருத்தப்படவுள்ளன.

புதிதாக 51 ஆயிரத்து 266 வீடுகள் கட்டப்படவுள்ளன.

60 ஆயிரம் பேர் இங்கிருந்து இடம் பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### பிரதம தபாலகத்தில் மக்கள் கூட்டம்

யாழ் பிரதம தபாலகத்தில் நேற்று மக்கள் அதிகமாக காணப்பட்டனர்.

கப்பலில் தபால்களைச் சேர்க்கும் கடைசி நாள் நேற்றைய தினமானதால் பலர் வெளிநாடுகளுக்கும் பிறமாவட்டங்களுக்கும் கடிதங்களை அனுப்ப வந்ததைக் காண முடிந்தது.

## வறியமாணவர்களுக்கு சீருடை வழங்கப்படும்

வறிய மாணவர்களுக்கு அடுத்த ஆண்டுமுதல் பாடசாலை சீருடைகள் வழங்கப்படும் என ஜனாதிபதி பிரேமதாஸ மொனராகலயில் நேற்று தெரிவித்தார்.

நாட்டில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் 15 ஆயிரம் பேர் விரைவில் ஆசிரியர்களாக சேர்க்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

## மந்திரிசபையில் மாற்றம் ஏற்படலாமென ஊகம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரொவ்வுக்கு மந்திரிப் பதவி கொடுக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் தோன்றியுள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியேயும் ஆதரவை நல்கியுள்ளனர்.

எனினும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐ.தே.கட்சி தலைவர்களிடம் இருந்து எதிர்ப்புகள் கிளம்பலாம் எனவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட மந்திரிப் பதவிகளிலும் ஏப்ரல் மாதமளவில் மாற்றங்கள் நிகழலாம் என்று வதந்திகள் அடிபடுகின்றன.

### காமினி மீது சாடுகிறார்

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவின் பிறந்த தினத்துக்கு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் செலவிட்ட பல இலட்சம் ரூபா பணத்தை இராணுவத்துக்கு வழங்கியிருக்கலாம் என ஐ.தே.க. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அரசு தேவையில்லாத செலவுகளை செய்வதாகக் கூறும் காமினி தனது பிறந்தநாளை ஐந்து நட்சத்திர ஹோட்டலில் பல இலட்சம் ரூபா செலவில் கொண்டாட வேண்டும் என அவர் கூறினார்.

## ★ வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சைக் கட்டிடம் பாவனைக்கு விடப்பட்டது

வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக்கான கட்டிடம் பூர்த்தியாகியது.

மூன்று மாடிக் கட்டிடமாக அமைப்பதற்கான நடவடிக்கையில் வல்வை மக்களும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும், செஞ்சிலுவைச் சங்கமும், பல தொண்டர் ஸ்தாபனங்களும் இணைந்தே செயற்படுகின்றன.

அதன் ஒரு கட்டமான நிலவறைக் கட்டிடம் மட்டுமே தற்போது பூர்த்தியடைந்துள்ளது.

சுமார் ஐம்பது லட்சம் ரூபாவில் பூர்த்தியாகிய இவ் கட்டிடம் தற்போது யாழ் மாவட்டத்திலேயே முதன்மையான நவீன வசதிகளைக் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போதுள்ள பொருளாதாரத் தடையையும் நோயாளர்களின் நலனையும் கருத்தில் கொண்டு பாவனைக்குத் திறந்து விடப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. 09

### பாரதரத்னா விருது

இந்தியாவின் அதி உயர் விருதான 'பாரதரத்னா'வை டாட்டா தொழிலக அன்பர் 'டாக்டா'வுக்கு ஜனாதிபதி வெங்கட்ராமன் வழங்கினார்.

## ஆப்கானிஷ்தானில் உணவு பஞ்சம் அபாயம்

புதிதாக நியமிக்கப்பட்ட ஆப்கானிஷ் அமைச்சர் திரு பர்சனிடம் பேசுகையில் ஆப்கானிஷ்தானில் பெரும் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதென்றும் அரசாங்கத்தின் வசமுள்ள கோதுமையின் அளவு மிகக்குறைவாக உள்ளதாகவும் உடனடியாகக் குறைந்த பட்சம் நூறுதொன் கோதுமை மா இறக்குமதி செய்யப்படாவிடின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகி விடும் என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சோவியத்யூனியனின் சிதறலுக்குப் பிறகு மாஸ்கோவில் இருந்து காபூலுக்கு வந்து கொண்டிருந்த உணவுப் பொருள்களின் வரவு தடைப்பட்டுவிட்டதென்றும் அதனால் காபூலில் விலைவாசி ஏற்றம் ஷெல் போல் ஏறி உள்ளது என்றும் தெரிவித்தார்.

## பேருவளையில் ஏப்ரலில் விசேட க. பொ. த. பரீட்சை

எதிர்வரும் க. பொ. த. விசேட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எவராவது கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சையில் தோற்றியிருந்தால் ஏப்ரல் பரீட்சை பெறுபேறு செல்லுபடியற்றது என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுன்ன அறிவித்துள்ளார்.

இதேநேரம் பேருவளையில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற கலவரத்தினால் 20, 21, 22, 23 ஆம் திகதிகள் நடைபெற்ற பாடங்களுக்குத் தோற்ற முடியாமல் போனவர்களுக்கும் ஏப்ரல் பரீட்சையில் தோற்ற வாய்ப்பளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (47)

### தெற்கில் கைத்தொழில் வீழ்ச்சி

தெற்கில் மேற்கொள்ளப்பட்டு வந்த லேஸ் நெய்தல் கைத்தொழில் வீழ்ச்சியடைந்து வருகிறது.

இவற்றுக்கான மூலப் பொருள்கள் கிடைப்பதில் ஏற்பட்டுவரும் கஷ்டத்தினாலேயே இது பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சித்தாத்த தேரோ வருவதை பிக்குமார் எதிர்க்கின்றனர்

சித்தாத்த தேரோ யாழ்ப்பாணம் வருவதற்கு சில பிக்குமார் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனராம்.

மாதுலுவாவே சோபித்த இனி என்ற பிக்கு இதனை எதிர்த்துள்ளார்.

வடக்கே அண்மையில் இராணுவ முகாம்களுக்கு வந்த மகாநாயக்க தேரோக்கள் படையினருக்கு ஆசி வழங்கவில்லை என்றும் யுத்தம் நின்று சமாதானம் வரவேண்டும் என்று ஆசி கூறினார்கள் என்றும் இந்தப் பிக்கு தெரிவித்துள்ளார்.

## இந்தியாவுக்கு கராம்பு கடத்த முயற்சி முறியடிப்பு

நீர்கொழும்பிலிருந்து படகு மூலம் பல லட்சம் ரூபா பெறுமதியான கராம்பை கடத்த எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இரகசிய தகவலையடுத்து நீர்கொழும்பு பொலிஸார் படகையும் ஐந்துபேரையும் பிடித்தனர்.

இந்தியாவுக்குப் புறப்படவிருந்த போது இவை கண்டு பிடிக்கப்பட்டன.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெப் நிறுவனத்தினரால் யாழ்கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 29-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது